(**CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE**)

**IN THE COURT OF THE I ADDL.DIST. & SESSIONS COURT, MADURAI.**

**DEPOSITION OF WITNESS FOR PROSECUTION / DEFENCE**

**SESSIONS CASE NO**. 262/2022 அ.சா.3

| | | |
|---|---|---|
| Name | : | திரு. தனபால் |
| Father's name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 04.08.2025.

(**A**5 சிறையிலிருந்து ஆஜர்படுத்தப்பட்டார். மற்ற எதிரிகள் ஆஜர்)

முதல் விசாரணை:-

நான் தற்போது மகாலிபட்டி, வேலாயுதம்பிள்ளை தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் மகாலிபட்டி ரோட்டில் தனபாலன் ஸ்கூட்டர் ஒர்க்ஸ் என்ற மோட்டார் வாகனம் பழுதுபார்க்கும் தொழில் செய்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன பால்பாண்டி என்பவரை எனக்கு தெரியும். அவர் என் கடைக்கு அடிக்கடி வந்து போவார். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. ஆஜர் எதிரிகள் யாரையும் எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக என்னை போலீசார் விசாரித்தார்கள். முகவரியை மட்டும் வாங்கிக்கொண்டார்கள்.

**<u>சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் கோரிக்கை விடப்பட்டு கோரிக்கை ஏற்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சுந்தரராஜ் என்பவரை எனக்கு தெரியாது. நான் கடை நடத்திய இடத்திற்கு அருகே ATM ஒன்று உள்ளது. அதில் ஒரு வாட்ச்மேன் இருந்தார் அவர் பெயர் எனக்கு தெரியாது. போலீஸ் விசாரணையில் பால்பாண்டி என்பவர் எனக்கு நண்பர் என்றும், நான் நடத்தும் ஒர்க் ஷாப்பிற்கு காலை மற்றும் மாலையில் வந்து செல்வார் என்றும், என் கடை அருகே உள்ள ATM சென்று வாட்ச்மேனாக பணிபுரிந்த சுந்தர்ராஜ்-ம் நானும், பால்பாண்டியும் 03.05.2019 ம் தேதியன்று என் கடையில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்ததாகவும், அப்போது மதியம் 1.40 மணியளவில் பால்பாண்டி மகன் தங்கராஜ் அவரது தகப்பனாரை தேடி வந்ததாகவும், எதிர்த்தார்போல் உள்ள அந்தோணி டீக்கடையில் உட்கார்ந்திருப்பதாக நான் சொன்னதாகவும் போலீஸ் விசாரணையில் கூறியுள்ளேன் என்று சொன்னால் அது சரியல்ல.

தங்கராஜ், அந்தோணி கடைக்கு போனபோது பின்னர் பெயர், விலாசம் தெரிந்து கொண்ட பாலமுருகன் என்ற மச்சபாலா, மணி என்ற புல்லட் மணி, பிரபாகரன் என்ற ஜைனா பிராபகரன், சிவப்பு ரோஸ் கலர் முழுக்கட்டை சட்டை அணிந்த முனியசாமி மகன் நெல்சன் ஆகிய நால்வரும் TN 59 BB 8424 மற்றும் TN 64 P 8120 ஆகிய இருசக்கர வாகனங்களில் மாநகராட்சி காம்ப்ளக்ஸ் முன் வேகமாக வந்து வண்டியை நிறுத்தியதாகவும், ஆளுக்கு ஒரு அருவாள், நீளமான பட்டாகத்தி போன்ற ஆயுதங்களை வைத்திருந்ததாகவும், நெல்சன் மட்டும் TN 64 P 8421 வண்டியில் இருந்து கொண்டு அந்தா இருக்கான்டா பால்பாண்டி போய் வெட்டுங்கடா என்று சொன்னதாகவும், மற்ற 3 பேரும் அவரை நோக்கி போனபோது நிலைகுலைந்து மற்றவர்கள் விலகிகொண்டதாகவும் போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் அது சரியல்ல.

மற்ற 3 பேரும் பால்பாண்டியை மறித்தாகவும், பால்பாண்டி உயிருக்கு பயந்து அந்தோணி கடைக்கு போய் தப்ப முயன்றதாகவும், அப்போது மேற்படி மூவரும் அந்தோணி கடைக்குள் வைத்து தங்கள் கையில் வைத்திருந்த ஆயுதங்களால் பால்பாண்டியை மாறி மாறி வெட்டியதாகவும், தங்கராஜ் என் அப்பாவை என்னடா

பன்றீங்க என்று கேட்டதாகவும், எதிரிகள் மூவரும் கையில் இருந்த ஆயுதங்களுடன் தங்கராஜ் ஐ பார்த்து ஒழுங்கா ஓடிடு என்று மிரட்டியதாகவும் காவல்துறை விசாரணையில் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் அது சரியல்ல. ஜைனா பிரபாகரன் மட்டும் கையில் இருந்த பெரிய பட்டாகத்தியை அங்கேயே தூக்கி எறிந்துவிட்டதாகவும் பின்னர் 4 பேரும் மோட்டார் சைக்கிளில் ஏறி ராமசாமி நாயுடு கடை வழியாக சென்றுவிட்டதாகவும் மேற்படி சம்பவத்தை நானும், பால்பாண்டி மகன் தங்கராஜ், பேங்க் வாட்ச்மேன் சுந்தரராஜ் , அந்தோணி ஸ்டீபன் ஆகியோர்கள் நேரில் பார்த்ததாகவும் ஓடிச்சென்று பார்த்தபோது பால்பாண்டி தலை, முகம், கைகள், இடது கால், இடது தொடை ஆகிய இடங்களில் பலத்த வெட்டுக்காயம் ஏற்பட்டு துடி துடிக்க ரத்த வெள்ளத்தில் இருந்ததாகவும் காவல்துறை விசாரணையில் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் அது சரியல்ல.

தங்கராஜ் தெற்குவாசல் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்று காவல்துறை விசாரணையில் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் அது சரியல்ல. மேற்சொன்னவாறு காவல்துறை விசாரணையில் நான் சொல்லியுள்ளேன் என்றும் தற்போது எதிரிகளுக்கு பயந்து உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை.**

Sd/- தனபால்

திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

Sd/- G.Muthukumaran,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
மதுரை.